OS 112/2023

வா.சா.2 பிச்சைக்காரன் த/பெ கோவிந்தராஜ்

நாள் 24.01.2025

குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி தான் என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். வாதி சொத்திற்கும் என் சொத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் வாதி சொத்திற்கு எதிரில் தான் என் சொத்து உள்ளது. என் சொத்தின் சர்வே நெம்பர் 544/3 மொரப்பந்தாங்கல் கிராமம் ஆகும். பிரதிவாதியின் சொத்து சர்வே நெம்பர் 283 ஆகும். சர்வே நம்பர் படி 200 சர்வே நம்பர்கள் தள்ளி தான் என் சொத்து உள்ளது என்றால் சரிதான். நான் அதிமுக கட்சியை சேர்ந்தவர் ஆவேன். நான் கவுன்சிலராக தேர்தலில் போட்டியிட்டேன்.

2. பிரதிவாதி பிச்சை திமுக கட்சியை சேர்ந்தவர். தேர்தலின் போது என் கட்சிக்காக நான் பிரசாரம் செய்தேன். அதேபோல் பிரதிவாதி அவரது கட்சிக்காக தேர்தல் பிரசாரம் செய்தார். தேர்தலில் நானும் பிரதிவாதியும் வெவ்வேறு கட்சியின் சார்பில் போட்டியிட்டதால் எங்களுக்குள் விரோதம் இருந்தது என்றால் இல்லை. நான் பிரதிவாதியின் எதிர் நிலத்தில் உள்ளேன் என்பதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. பிரதிவாதி பெயரில் தவறாக கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதி சொல்லி தான் எனக்கு அதுபற்றி தெரியும். இதே பதிலை தான் என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் நான் வாக்குமூலமே தாக்கல் செய்யவில்லை. ஆவணம் எதுவும் இல்லாமல் நான் அளித்துள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ள கூடியது என்றால் சரியல்ல. அரசியல் விரோதம் காரணத்தினால் தான் பிரதிவாதிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.